1966-ம் வருஷம் வரையிலே, ஜூன் மாதம் வரையிலே செயல் பட்டிருக்கிறது. ஜூலை மாதத்திலிருந்துதான் இத்திடம் கைவிடப் பட்டிருக்கிறது.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்த "சில்லிங் செண்டர்" முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் தன்னுடைய தொகுதியிலே ஆரம்பிக்கவேண்டுமென்று கருதி சிங்கப் பெருமாள் கோவிலிலே ஆரம்பிக்கப்பட்டதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது என்று கேளுங்கள். குற்றம் சாட்டும் வகையிலே கேட்காமல், நீங்கள் பெற நினைக்கும் விடை வரும் விதத்தில் வேறு விதமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : இந்தக் காரணங்களுக்காக அந்த இடத்திலே மாற்றப்பட்டதா ? அப்படியானால், அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது 1962-லே ஆரம்பிக்கப்பட்டு 1963-லே வேலை துவங்க ஆரம்பித்தது. ஏற்கெனவேயிருந்த முதலமைச்சரவர்களின் தொகுதியா அல்லது வேறு அங்கத்தினருடைய தொகுதியா என்றும், அன்று எந்தத் தொகுதியில் சேர்க்கப்பட்டது என்பதுபற்றியும் தகவல் இல்லை.

Thiru K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that the dairy at Singaperumalkoil does not get enough quantity of milk in that area, because the Ayyanavaram Milk Society has been allowed to operate in that area in competition with Government dairy there with the result there is cut-throat competition between the two and the Milk Society is able to get better product and larger quantity when compared to Government Project?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது சிங்கப்பெருமாள் கோவிலுக்குப் பக்கத்திலுள்ளதைப்பற்றிய கேள்வி. அயனாவரத்திலுள்ளதற்கும் இதற்கும் போட்டியிருந்ததாகத் தெரியவில்லை.

திரு. முனு ஆதி : தலைவரவர்களே, மாதவரத்திலே உள்ள பண்ணையில் அந்தப் பக்கத்திலே இருப்பவர்களிடமிருந்து கொள்முதல் செய்வது கிடையாது. அய்யனாவரம் திட்டத்திற்கு $1\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் கடன் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பால்பண்ணை இயங்காமல் போனதும் அந்த $1\frac{1}{2}$ இலட்சம் ரூபாயைப் பெறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : 1968-ஆம் வருஷம் ஜனவரி மாதம் வரையில் அரசாங்கத்திற்கு 64,320 ரூபாய் திருப்பிக் கட்டியிருக்கிறார்கள். மேலும் அதனுடைய இயந்திர சாதனங்களைப் பிரித்து எடுத்ததில் 31,710 ரூபாய் 12 காசு கிடைத்திருக்கிறது.

நத்தத்தில் மாட்டுப் பண்ணை.

*136—வினா.—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு உணவு, வேளாண் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் வட்டம், நத்தத்திற்கு அண்மையில் மாட்டுப் பண்ணை அமைப்பதற்கான ஆய்வு வேலைகள் முடிந்தும் இன்று வரை பண்ணை அமைக்கும் பணியினைத் தொடங்காததின் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மன்றப் பேரவையில் விவர அறிக்கை (a) ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

(a) 208-ம்பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, இந்த விவரப் பட்டியலில் நிலத்தை கையகப்படுத்துவது குறித்து ஆட்சேபணையிருந்ததாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த நிலம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவரின் சொந்த நிலம் என்பதால் அந்த நிலத்தைக் கையகப்படுத்தவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அந்த நிலம் யாருடையது என்பதுபற்றி அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை. கலெக்டர் அவர்களும், கால்நடை அதிகாரி அவர்களும் பார்வையிட்டனர். பொருத்தமானது என்று கருதிய 1,405 ஏக்கரில் 325 ஏக்கர் புறம்போக்கு 1,080 ஏக்கர் பட்டா நிலம். பட்டா நிலத்திற்கு ஆட்சேபணை செய்ததால் எருமைப் பண்ணை வைப்பது கைவிடப்பட்டது.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : இரண்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டும்கூட, முழு அளவிற்குப் பயன்படுத்திக்கொள்வதுகுறித்து அரசாங்கம் முனைப்பாக ஆலோசித்து வருகின்றது என்று சொல்லப்படுகிறது. அபிஷேகப்பட்டியில் கால்நடைப் பண்ணையில் பல திட்டங்கள் போட்டும் கிட்டத்தட்ட வருஷங்கள் ஆகின்றன, இன்னும் அது ஆலோசனையில்தான் இருக்கின்றது என்றால், ஒரு திட்டத்தை ஆரம்பித்து நன்றாகச் செயல்படுத்த வேண்டுமென்று சொல்லுகின்ற நேரத்தில் அதிலுள்ள பல வேலைகள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன என்றால், அதற்கு எந்த இடத்தில் குறையிருக்கிறது என்று அறிய ஆசைப்படுகிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டமிடப்பட்டு அபிஷேகப்பட்டி கால்நடைப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டு 4 வருஷங்கள் ஆகின்றன. இன்னும் அதிலுள்ள பல வேலைகளை நடத்த முனைந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் அதுபற்றி ஏதாவது செயல்பட்டுக்கொண்டிருக்கிறதா, பிளான் அனுப்பி இன்னும் முடிவு பெறாமல் இருக்கிறதா, அதற்கு ஒரு காலவரையறை வைத்து முடிவு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கால்நடை அபிவிருத்திக் குழுவில் அங்கத்தினர் அவர்கள் உறுப்பினராக இருக்கிறார்கள். அண்மையிலே ஹோசூரிலே நடந்த கூட்டத்திலே, முன்னேற்றத்திற்கான ஆலோசனையைக் கனம் அங்கத்தினர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். "ஜாயிண்ட் டைரக்டர் ஆஃப் அக்ரிகல்சர்"-ஐ அனுப்பிப் பரிசீலனை செய்து கால்நடைக்கு வேண்டிய தீவனம் உற்பத்தி செய்ய வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டு, திருநெல்வேலிக்கு அனுப்பக்கூடிய அளவுக்குக் கணிசமான உற்பத்திசெய்ய மாட்டுத் தீவனத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள் 4 வருஷங்களாகச் செயல்படாமல் இருக்கின்றது என்று. நான் பொறுப்பேற்ற பிறகு அபிஷேகப்பட்டியில் சீராக இயங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறேன் என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்களும் ஒத்துக்கொள்வார்கள்.

அரிசி ஆலைகளுக்கு அனுமதிச் சீட்டுகள்

* 137 வினு—**வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு உணவு, வேளாண் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினைக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1966-ம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கு முன்னால் வரை Rice Mill களுக்கு பர்மிட் வழங்கும் அதிகாரம் யாரிடமிருந்தது ?

(இ) அதன் பிறகு திடீரென்று இவ்வதிகாரம் மாற்றப்பட்டதா ?

(உ) 1966-ம் ஆண்டு டிசம்பர் முதல் 1967-ம் ஆண்டு ஜனவரி மாதம் வரையில் எத்தனை பர்மிட்டுகள், யார் யாருக்கு வழங்கப்பட்டன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) முதல் (உ) வரை அவை முன்பு ஒர் விவரமான அறிக்கை (a) வைக்கப்பட்டுள்ளது.

(a) 209–236-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.